IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.116/2016
DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்: 12.15 PM.

<u>வா.சா. 1 சாட்சி முத்துக்குமார் த.பெ.செல்லக்கண்ணு</u>

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 16.09.2025 in accordance with the provisions of Act XX141.**

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>:

1. எனது பாட்டி தாயம்மாள், எனது தந்தை 1ம் வாதி, 3, 4 வாதிகள் சேர்ந்து 7, 8 பிளாட்டுகளுக்கான சாலைக்காக திருப்பரங்குன்றம், பேரூராட்சிக்கு 17.11.1995 ம் தேதி ஆவண எண். 2659/95 குறித்து எனக்கு தெரியுமா என்றால் நேரடியாக தெரியாது. செல்வமணி, கங்காதேவிக்கு மேற்படி 4 பேரும் வா.சா.ஆ. 8 ஆவணம் மூலம் எழுதிகொடுத்துள்ளார்கள் என்றால் நேரடியாக தெரியாது. வா.சா.ஆ. 8 ஆவணம் குறித்து நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது.

2. நான் இவ்வழக்கில் வாதிகள் அனைவருக்கும் சேர்ந்துதான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். 1 முதல் 4 வாதிகள் கிரையம் செய்தது 5 முதல் 7 வாதிகளை கட்டுப்படுத்தி சொத்து விற்கப்பட்டது என்றால் நேரடியாக தெரியாது. 1 முதல் 4 வாதிகள் கிரையம் செய்தது ஆவணங்கள் மூலமாக தெரியும் என்றால் சரிதான்.

3. அதன் அடிப்படையில்தான் நான் நீதிமன்றத்தில் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதன் அடிப்படையில்தான்

பிளாட் எண். 7, 8 க்கு செல்வமணி, கங்காதேவி ஆகியோர்களுக்கு விற்பனை செய்த ஆவணங்களை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது தகப்பனார் , வாதி 2 மற்றும் எனது பாட்டி விற்பனை செய்த ஆவணங்கள் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

4. தாவா புல எண்ணில் உள்ள மொத்த விஸ்தீரணமான சர்வே எண்.283/9 ல் கட்டுப்பட்ட 86 செண்டு மற்றும் சர்வே எண். 283/1 ல் கட்டுப்பட்ட 16 செண்டு ஆக 102 செண்டு கட்டுப்பட்ட 16 செண்டு சம்பந்தமாக நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எவ்வளவு சொத்துக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 86 செண்டில் 16 செண்டுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி 86 செண்டு சர்வே எண்.283/9 ல் கட்டுப்பட்டதாகும். மேற்படி சர்வே எண்.283/9 தவிர வேறு எந்த சர்வே எண்ணிலும் நான் எனக்கு பாத்தியப்பட்ட சொத்து இருப்பதாக இவ்வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

5. சர்வே எண்.283/9 ல் கட்டுப்பட்ட 86 செண்டில் எவ்வளவு சொத்துக்களை விற்பனை செய்துள்ளேன் என்றால் சுமார் 70 செண்டு ஆகும். மேற்படி 70 செண்டில் செல்வமணி, கங்காதேவிக்கு 7, 8 பிளாட்டுக்கள் விற்பனை செய்தபோது, சாலைக்கான இடம் விற்பனை செய்தோமா என்றால் தெரியாது.

6. மேற்படி 86 செண்டை பொறுத்து வா.சா.ஆ. 5 ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ள நிலையில் அது குறித்து என்னால் சாட்சியம் அளிக்க முடியுமா என்றால் முடியாது. வா.சா.ஆ. 5 ஆவணத்தில்

குறிப்பட்டப்பட்டுள்ள பிளாட்டுகள், பாதைகள் குறித்து சாட்சியம் அளிக்க முடியுமா என்றால் முடியாது.

7. வா.சா.ஆ. 8 ஆவணம் குறித்து சாட்சியம் அளிக்க முடியுமா என்றால் முடியும். மேற்படி வா.சா.ஆ. 8 ல் உள்ள சொத்து விபரத்தில் மேற்கு நான்குமாலாக என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சர்வே எண்.284 ஸ்தலம் என்று தவறாக குறிப்படப்பட்டுள்ளது. உண்மையில் சர்வே எண்.283/9 என்று இருக்கவேண்டும். அவ்வாறு இருக்கவேண்டும் என்று எனக்கு யார் சொன்னது என்றால் ஞாபகம் இல்லை.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.)

**மறுவிசாரணை: இல்லை.**

முடிவடையும் நேரம்: 01.00 PM.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை

தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி

அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்

கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.08.16 14:10:48 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),

திருமங்கலம்.